UNIVERSITÄTS-
**KINDERSPITAL ZÜRICH**

அவசர சூழ்நிலையில்
பெற்றோருக்கான தகவல்

# காய்ச்சல்வலிப்பு

காய்ச்சல்வலிப்பு என்றால் என்ன?

- காய்ச்சல் காரணமாக ஏற்படுகின்ற தாக்குதல், காய்ச்சல்வலிப்பு எனப்படும்.
- ஏறக்குறைய 100 பிள்ளைகளில் 3 பேருக்கு இவ்வாறான தாக்குதல் உண்டாகின்றது.
- குடும்பத்துக்குள் இருந்தால், வருவதற்கான சாத்தியங்கள் அதிகமாகும்.
- 6 மாதங்களுக்கும் 6 வயதுக்குமிடைப்பட்ட பிள்ளைகளுக்கு இது வரலாம்.
- இக் காய்ச்சல்வலிப்பானது திடீரென ஏற்படும் அத்துடன் அநேகமாக முதலாவது முறை காய்ச்சல் அதிகரிப்புடன் வரும், ஆனால் ஒவ்வொரு முறை காய்ச்சல் வரும்போதும் வருவதற்கும் வாய்ப்புண்டு.
- பிள்ளைகள் சுயநினைவிழப்பர், உடல் விறைப்படையும் அத்துடன் முழு உடலும் ஒரே மாதிரியாக சுண்டியிழுக்கும். கண்கள் திறந்திருக்கும் அத்துடன் அநேகமாக மேல் நோக்கிய வண்ணம் இருக்கும். முகத்தின் நிறம் நீலமாக அல்லது சிவந்து அல்லது வெளிறி இருக்கும். அநேகமாக இந்த வலிப்பு 5 நிமிடங்களுக்குக் குறைவாக இருக்கும். இந்த வலிப்பின் பின் பிள்ளைகள் தூக்கக்களைப்பாக இருப்பார்கள்.
- இத் தாக்குதல் 15 நிமிடங்களுக்கு மேலே நீடித்தால் அல்லது 24 மணித்தியாலங்களுக்குள் பல தடவைகள் வந்தால் அல்லது தாக்குதலின் பின் உடலின் ஒரு பக்கம் மட்டும் பாதிக்கப்பட்டால் அதாவது வலிப்பு வந்த பின் பாதியுடம்பு மட்டும் சிறிது காலத்துக்கு செயலிழந்திருந்தால், அதனைக் கடுமையான காய்ச்சல்வலிப்பு என்பர்.
- காய்ச்சல்வலிப்பு என்பது காக்கைவலிப்பு அல்ல!

காய்ச்சல்வலிப்பு எவ்வாறான அபாயங்களைக் கொண்டுள்ளது?

- காய்ச்சல்வலிப்பினால் மரணம் சம்பவித்ததில்லை.
- வலிப்பின் போது, மிக அரிதாக காயங்கள் ஏற்படலாம் அல்லது உணவுக் குழாய்க்குள் உணவுகள் அடைக்கலாம்.
- காய்ச்சல்வலிப்பினால் நரம்புத் தொகுதியில் அல்லது மூளை வளர்ச்சியில் எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.
- பிற்காலத்தில் காக்கைவலிப்பு உண்டாவதற்கான அபாயம் மிகக் குறைவானது.
- இக் காய்ச்சலின் பின்புலத்தில் மிகக் கடுமையான ஒரு நோய் மறைந்திருக்கலாமாகையால், காய்ச்சல்வலிப்பு வந்த பின் ஒரு வைத்தியரிடம் சென்று காட்டுங்கள் அல்லது வைத்தியருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

காய்ச்சல்வலிப்பு மீண்டும் மீண்டும் வருமா?

- அநேகமான பிள்ளைகள் ஒரு முறை மட்டும்தான் காய்ச்சல் வலிப்பால் கஷ்டப்பட்டிருப்பார்கள்.
- ஏறக்குறைய 30% பிள்ளைகளுக்கு இரண்டாவது முறையும், 10% பிள்ளைகளுக்கு மூன்றாவதும் அதற்கும் மேற்பட்ட தடவைகளும் காய்ச்சல் வலிப்பு வருகின்றது.

காய்ச்சல்வலிப்பு வராமல் தடுப்பதற்கு என்ன செய்யலாம்?

- காய்ச்சல்வலிப்பு ஏற்படாமல் நிச்சயமாக தடுப்பதற்கு, எந்த நடவடிக்கைகளும் இல்லை.
- காக்கைவலிப்புக்கெதிரான (Antiepileptika) மருந்துச் சிகிச்சையைத் தொடர்ந்து செய்வதனால் ஏற்படக் கூடிய பக்க விளைவுகளைக் கருத்தில் கொண்டும், ஏதோ வருத்தத்தினால் காய்ச்சல் வருவதனால், காய்ச்சல்வலிப்பிலிருக்கக் கூடிய நன்மையான முன்னறிவிப்பைக் கருத்தில் கொண்டும் Antiepileptika மருந்துச் சிகிச்சை செய்யப்படுவதில்லை.
- காய்ச்சலைக் குறைப்பதற்கெடுக்கும் நடவடிக்கைகள், தாக்குதல் வராமல் தடுக்கின்றன என்பதற்குச் சான்றுகள் இல்லை.

காய்ச்சல்வலிப்பு வரும்போது, நான் என்ன செய்ய வேண்டும்?

1. அமைதியைக் கடைப்பிடியுங்கள்! வெளிப்பார்வைக்கு அவ்வாறு தெரியாவிட்டாலும் கூட, காய்ச்சல்வலிப்பு அபாயமற்றது.
2. உங்கள் பிள்ளையைக் காயப்படுத்தக் கூடிய பொருட்களை அகற்றி விடுங்கள்.
3. தாக்குதலுக்குட்படும் (வலிப்பு) நேரத்தைக் கணிப்பதற்காக, கடிகாரத்தைப் பாருங்கள்.
4. தாக்குதல் (வலிப்பு) 5 நிமிடங்களுக்கு மேல் நீடித்தால், Diazepam Rektiolen என்னும் மருந்தை 5 mg <15 kg அல்லது 10 mg >15 kg மலவாயிலுக்குள் வையுங்கள்.
5. அடுத்த 10 நிமிடங்களுக்குள் வலிப்பு நிற்காது விட்டால், அவசரசிகிச்சை வைத்தியருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள் (தொலைபேசி. 144).
6. தாக்குதலின் (வலிப்பின்) பின் சில பிள்ளைகள் வாந்தி எடுப்பதனால், வலிப்பு நின்ற பின், நீங்கள் உங்கள் பிள்ளையைப் பக்கமாக சரித்துப் படுக்க விட வேண்டும்.

எக் காரணம் கொண்டும் உங்கள் பிள்ளையைக் குலுக்கவோ, இறுக்கமாகப் பிடிக்கவோ, தாடையை வலுக்கட்டாயமாகத் திறக்கவோ, பற்களுக்கிடையில் பொருட்களை வைக்கவோ, வாயுடன் வாய் வைத்து சுவாசிக்க வைக்கவோ (வலிப்பின் போது அநேகமாக பிள்ளைகள் நீல நிறமாகியிருப்பார்கள்) அல்லது நீர் தெளிக்கவோ வேண்டாம்.

UNIVERSITÄTS-
KINDERSPITAL
ZÜRICH

Das Spital der
Eleonorenstiftung

Universitäts-Kinderspital Zürich
Lenggstrasse 30
CH-8008 Zürich

www.kispi.uzh.ch
Telefon +41 44 249 49 49